DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : காளியம்மாள் | Father/Husband Name : ஆறுமுகம் |
| Age : 54 | Village : ஓ.மேட்டுப்பட்டி |
| Taluk : | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5 Mar 2026 11:36

(The petitioner present. R1, R2 not Present Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

1. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் மனுதாரர் மாதவி வீடு எங்கள் வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் இருக்கிறது என்றால் சுமார் பத்து வீடு தள்ளி இருக்கிறது. அவர் எங்கள் ஊரில் உள்ள பேருந்து நிறுத்தத்திற்கு செல்ல வேண்டுமென்றால் எங்களுடைய வீடு இருக்கக்கூடிய தெரு வழியாகத்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். மாதவியின் சிறு வயதிலேயே அவருடைய தந்தை இறந்து விட்டார் என்றால் சரிதான், மாதவியின் தந்தை இறக்கும்போது மாதவிக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 15 வயது இருக்கும். மாதவியுடன் பிறந்த நபர்கள் எத்தனை நபர்கள் என்றால் 4 பெண் குழந்தைகள் ஆவார்கள். அவர்கள் அனைவரும் மாதவியை விட இளையவர்கள் என்றால் சரியல்ல, அவருக்கு இரண்டு அக்கா இருக்கிறார்கள்.

2. என்னுடைய மகன் 1வது எதிரி முனியசாமி பத்தாம் வகுப்பு வரை படித்த பிறகு அவர் காவல்துறைக்கு வேலைக்கு செல்லும் வரை வேறு வேலைக்கு எதுவும் செல்லவில்லை என்றால் ஐடிஐ படித்தார், அதற்குப் பிறகு காவல்துறை வேலைக்கு செல்வதற்காக படித்துக் கொண்டிருந்தார், வேலைக்கு எதுவும் செல்லவில்லை. என்னுடைய மகன் முனியசாமி ஆக்டிங் டிரைவர் ஆக அந்த காலத்தில் வேலை செய்தார் என்றால் சரிதான். மனுதாரர் எங்களுடைய உறவினர்கள் என்பதால் நாங்கள் இணக்கமாகத்தான் இருந்தோம் என்றால் சரிதான். என்னுடைய கணவர் எங்கு வேலை செய்கிறார் என்றால் சுங்கவரி அலுவலகத்தில் வேலை செய்கிறார். அவருக்கு மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூபாய் 30,000 ஆகும். எனக்கு என்னுடைய அப்பாவின் பூர்வீக நிலம் இருக்கிறது என்றால் 75 சென்ட் நிலம் மட்டும் தான் கொடுத்தார். என்னுடைய மகளின் திருமணத்தின்போது என்னுடைய மகளுக்கு எவ்வளவு நகை போட்டோம் என்றால் 7 பவுன் போட்டோம்.

3. என்னுடைய இரண்டாவது மகன் குருசாமிக்கு எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் மேட்டுப்பட்டியில் வைத்து நடைபெற்றது. என்னிடம் காட்டப்படும் 10.09.2021 ஆம் தேதிய திருமண பத்திரிக்கை என்னுடைய இரண்டாவது மகன் குருசாமிக்கு நடைபெற்ற திருமணத்திற்கான பத்திரிக்கை என்றால் சரிதான். **<u>(அது ம.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது).</u>** அந்த திருமணம் எங்களுடைய உறவினர் சண்முக கனி தலைமையில் நடைபெற்றது என்றால் இல்லை, சண்முககனியின் தந்தை சுந்தரபாண்டியன் எங்களுடைய நெருங்கிய உறவினர் என்பதாலும், அவர்

இறந்துவிட்டதால் அவருடைய மகன் சண்முகக்கனியின் பெயரை திருமண பத்திரிக்கையில் போட்டோம்.

4. என்னுடைய அப்பா மற்றும் சகோதரர்கள் அ.இ.அ.தி.மு.க கட்சியில் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான், ஆனால் இப்பொழுது இல்லை. என்னுடைய அப்பா 03.02.2025 ஆம் தேதி இறந்தார் என்றால் ஒரு வருடத்திற்கு முன்பு இறந்தார், ஆனால் தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அந்த இறப்பு நிகழ்ச்சியில் சண்முக கனி கலந்து கொண்டு அனைத்து வேலைகளையும் முன்நின்று செய்தார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. சண்முகக்கனி என்னுடைய அப்பாவிற்கு கண்ணீர் அஞ்சலி போஸ்டர் அடித்தார் என்றால் தெரியவில்லை, நான் இன்று தான் அதை நீதிமன்றத்தில் வைத்து பார்க்கிறேன்.

5. என்னுடைய மகனான ஒன்றாவது எதிர்மனுதாரர் மனுதாரருடன் பழகி வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் உறவினர் என்ற முறையில் வந்து செல்வார், ஆனால் அவர்களுக்குள் பழக்கம் இருந்ததா என்பது எனக்கு தெரியாது. அந்த பழக்கத்தின் அடிப்படையில் மனுதாரர் கர்ப்பமுற்றார் என்றாலும், அதனால் பெரியவர்கள் பேசி அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தோம் என்றாலும் சரியல்ல, மனுதாரர் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால் எங்களை காவல் நிலையத்தில் இருந்து அழைத்தார்கள், அதற்குப் பிறகுதான் அது பற்றிய விபரம் எனக்கு தெரியும். மனுதாரர் குழந்தை உண்டானதற்கு என்னுடைய மகன் தான் காரணம் என்பதை அவர் ஒப்புக்கொண்டு மனுதாரரை திருமணம் செய்து கொண்டார் என்றாலும், பதிவு திருமணத்தில் கையொப்பம் செய்தார் என்றாலும் சரியல்ல, சண்முகக்கனி என்னுடைய மகனை மிரட்டி கையொப்பம் செய்ய வைத்தார். பதிவு திருமணத்தில் நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. யாருடைய தூண்டுதலின் பேரிலும் திருமணம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், எங்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் தான் அது பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல, சண்முகக் கனியின் தூண்டுதலின் பேரில் தான் பதிவு செய்யப்பட்டது.

6. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரருக்கும் ஒன்றாவது எதிர்மனுதாரருக்கும் திருமணமாகி பல ஆண்டுகள் கழித்து தான் அது பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒன்றாவது மனுதாரருக்கு பிறந்த குழந்தையின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் காளீஸ்வரி ஆகும். மனுதாரரும் குழந்தையும் என்னுடைய மகனுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக காவலர் குடியிருப்பில் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த குழந்தை எத்தனை வயது வரை இருந்தது என்றால் 6 வயது வரை இருந்தது. அந்த குழந்தை உடல் நலக்குறைவு இருந்ததால் மனுதாரர் அடிக்கடி குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வார் என்றால் சரிதான். குழந்தையை பராமரிக்க வேண்டிய பொறுப்பு என்னுடைய மகனுக்கு இருக்கின்றது என்றும், குழந்தையின் மருத்துவ செலவிற்கு பணம் வேண்டும் என்று மனுதாரர் என்னுடைய வீட்டிற்கு வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது.

7. மனுதாரர் குச்சி கம்பெனியில் வேலை செய்து மாதம் ரூபாய் 15,000 சம்பளம் வாங்கினார் என்பதை எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் அவர் சடையம்பட்டியில் உள்ள குச்சி கம்பெனிக்கு வேலைக்கு செல்வார், அதன் அடிப்படையில்

கூறுகிறேன். அந்த கம்பெனியின் பெயர் பற்றி எனக்கு எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் வேலைக்கு எதுவும் செல்லவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

8. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் மனதார பல ஆண்களுடன் பழகி வந்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு பல ஆண்களுடன் பழக்கம் இருந்தது என்பதை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நடைபெற்ற எந்த விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் மனுதாரரையும் அவருடைய குழந்தையையும் புறக்கணித்து வந்ததால் குழந்தைக்கு DNA பரிசோதனை எடுக்க வேண்டும் என்று மனுதாரர் மனு கொடுத்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய மகன் DNA பரிசோதனைக்கு சென்றபோது மனுதாரர் குழந்தைக்கு பரிசோதனை செய்யவிடவில்லை.

9. மனுதாரர் அவருடைய தந்தையை இழந்து அவருடைய தாயாரின் அரவணைப்பில் ஏழ்மையான நிலையில் வாழ்ந்து வருகிறார் என்பதால் அவரை என்னுடைய மகனுக்கு திருமணம் செய்து வைக்க எங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் என்னுடைய மகன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய இருந்த நிலையில் அந்த வழக்கில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக சண்முகக்கனி ஏற்பாட்டில் பதிவு திருமணம் செய்து கொண்டு, அந்த திருமணத்தை ரத்து செய்ய சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் என்னுடைய மகன் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

10. நாங்கள் மனுதாரரை புறக்கணித்து வந்ததாலும், என்னுடைய மகனுக்கு வேறு திருமணம் செய்து வைப்பதற்காக மனுதாரரை விவாகரத்து கொடுக்க சொல்லி வற்புறுத்தியதாலும் மனுதாரர் சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் நாங்கள் மனுதாரரின் வீட்டு வழியாக செல்லும்போது அவர்கள் எங்களை ஏசி விட்டு, எங்கள் மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளார்கள், நான் ஒருபோதும் அவர்கள் மீது புகார் கொடுத்தது கிடையாது. என்னுடைய மகன் காவல்துறையில் வேலை செய்து வருவதால் மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரணை எதுவும் செய்யாமல், எங்களுக்கு ஆதரவாக வழக்கை முடித்தார்கள் என்றால் சரியல்ல.

11. என்னுடைய மகன் அவருடைய குழந்தையை பராமரிக்காமலும், மருத்துவச் செலவுக்கு பணம் கொடுக்காமலும் இருந்ததால் குழந்தைக்கு தேவையான மருத்துவ சிகிச்சை வழங்க முடியாமல் குழந்தை இறந்துவிட்டது என்றால் சரியல்ல. ஆகையால் மனுதாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு நாங்கள் அனைவரும் சேர்ந்து இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அதேபோல், ஒன்றாவது எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வாழ்க்கைப் பொருளுதவி கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. மனுதாரர் அவருடைய மனைவி கோரியுள்ளபடி அவருக்கு பரிகாரம் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

5 Mar 2026 12:10 Judicial Magistrate 2, Sattur